தென்காசி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4469/அ1/2014. நாள் .09.2016

பொருள்– நியமனம் – கருணை அடிப்படை நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு இரா.சுப்பிரமணியன், இளநிலை உதவியாளர், ஐசிஐ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தென்காசி என்பாரது மகனும் வாரிசுதாரருமான திரு சு.புஷ்பாகரன் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கல் – சார்பு.

பார்வை– தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 26205/ஜே4/2015. நாள் 20.07.2015

---

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும், வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் தென்காசி, ஐசிஐ அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே காலமான திரு இரா.சுப்பிரமணியன் என்பாரது மகனும் வாரிசுதாரருமான திரு சு.புஷ்பாகரன் என்பாருக்கு கருணை அடிப்படையில் கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பதவியில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் மற்றும் முகவரி | நியமனம் அளிக்கப்படும் பதவி மற்றும் அலுவலகம் |
|---|---|
| திரு சு.புஷ்பாகரன்<br>த/பெ இரா.சுப்பிரமணியன் (லேட்)<br>எம் 98, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் காலனி,<br>தென்காசி 627 811 | இளநிலை உதவியாளர்<br>உதவித்தொடக்கக்கல்வி அலுவலகம்<br>கீழப்பாவூர் சாகம் |

மேற்கண்ட நியமனம் முற்றிலும் தற்காலிகமானதாகும். நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப் பெற்ற ஒருவார காலத்திற்குள் பணியில் சேர வேண்டும். உரிய காலத்திற்குள் பணியில் சேர தவறினாலோ அல்லது விண்ணப்பதாரரால் தரப்பட்டுள்ள விவரங்கள் தவறு என அறிய வந்தாலோ இந்நியமனம் இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

பணியில் சேரும் நாளன்று உதவி மருத்துவ அலுவலரிடம் உடல் நலத் தகுதிச் சான்று பெற்று பணியில் சேர வேண்டும். பணியில் சேர்ந்த உடன் அதற்கான அறிக்கையினை உடனடியாக அன்றே இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

பணியில் சேர்ந்த நாள் முதல் ஊதிய விகிதம் ரூ.5200–20200 தர ஊதியம் ரூ.2400 மற்றும் அதற்கு தகுதியுடைய இதரப் படிகளும் விதிகளின்படி பெற தகுதியுடையவராகிறார்.

இவரதுக் கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மைக் குறித்து சான்று உடனடியாக பெறப்பட வேண்டும்.

..2..

ரு.செந்தமிழ்கனிவி

## நிபந்தனைகள்

1. பள்ளி இறுதித் தேர்வில் தமிழ் மொழிப் பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாதவராக இருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

2. தனியரின் எஸ்எஸ்எல்சி சான்றின் உண்மைத் தன்மையை அறிய எடுக்கப்படும் நடவடிக்கையில் தனிநபர் முன்னிலைப்படுத்திய கல்விச் சான்று உண்மையானது அல்ல என்றோ விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாது என்றோ கண்டறியப்பட்டால் தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நீக்கரவு செய்யப்படும்.

3. தனிநபர் தகுதிகாண் பருவ காலத்திற்கு மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வினை தேர்ச்சி பெற வேண்டும்.

4. அரசுக் கடித எண் 2941/க்யு1/94-1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 01.03.1994ன்படி ஓராண்டு காலத்திற்குள் பணிவரன்முறை சார்ந்த கருத்துருக்கள் இயக்குநருக்கு அனுப்பிடல் வேண்டும்.

5. நியமனம் பெற்ற நபர் பங்குத்தொகை ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension) மட்டுமே சேர தகுதியுடையவராகிறார்.

நியமனம் பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலைவாய்ப்பு பதிவு அட்டையை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட நபர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8.9.16

மாவட்டக்கல்விஅலுவலர்
தென்காசி

8/09/16

பெறுநர்

திரு சு.புஷ்பாகரன்
த/பெ இரா.சுப்பிரமணியன் (லேட்)
எம் 98, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் காலனி
தென்காசி 627 811

நகல்– உதவித்தொடக்கக்கல்விஅலுவலர், கீழப்பாவூர் சரகம்

நகல்– பணிந்தனுப்பப்படுகிறது.

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) அவர்கள் சென்னை.6
2. முதன்மைக்கல்விஅலுவலர், திருநெல்வேலி

நகல்– உபரி